Source: *Tamil Murasu*, p3
Date: 14 August 2017

# ஆழமான கருத்துகளோடு ஆட்டம், ஆனந்தம்

திமத்தி டேவிட்

*‘இணைதேடும் இணையச் செயலி’ வழியாக வாழ்க்கைத் துணையைச் சந்திக்க முடியுமா, பிரிந்த பிறகும் முன்னாள் காதலர்கள் நண்பர்களாக இருக்கலாமா, மனைவியை இழந்த பிறகு மகளுக்காக மறுகல்யாணம் செய்துகொள்ளலாமா போன்ற சமூகம் சார்ந்த சிந்தனைகளை ஆராய முற்பட்டது இவ்வாண்டின் ‘சங்கே முழங்கு 2017’.*



பார்வையாளர்களின் வரவேற்பைப் பெற்ற குத்தாட்ட நடனக் காட்சியில் சரவணன் சண்முகம் (வலமிருந்து மூன்றாவது), குழுவினர்.

**படங்கள்: திமத்தி டேவிட்**

தமிழ்த் திரைப்படத் தாக்கத்துடன் உள்ளூர் விவகாரங்களை நகைச் சுவையுடன் அலசியது ‘சங்கே முழங்கு 2017’.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தின் கலாசார மையத்தில் சுமார் 2,200 பேர் முன்னிலையில் ஆகஸ்ட் 5, 6ஆம் தேதிகளில் அரங்கேறியது இந்த நிகழ்ச்சி.

ஈராண்டுகளுக்கு ஒருமுறை சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரவை படைத்து வரும் சங்கே முழுங்கு இந்த ஆண்டு 20 ஆண்டு நிறைவைக் கொண்டாடியது.

செயற்கை நுண்ணறிவு மூலம் இணையம் வழி இணைதேடும் ‘கணை’ எனும் செயலியைக் கொண்டு ‘காதல், திருமணத்தில் முடிய வேண்டியது அவசியமா, திருமணம் செய்தால் பிள்ளைகள் பெறுவது கட்டாயமா போன்ற விவாதங்களை எழுப்பி, மறைமுக மாக குறைந்து வரும் பிறப்பு விகிதம் பற்றிப் பேசியது நிகழ்ச்சி.

அம்பிகாபதி – அமராவதி காதலில் தொடங்கி இரண்டு விதமான ஜோடிகளின் காதல் பயணத்தை சித்திரித்தது இவ்வாண்டின் ‘சங்கே முழங்கு’.

‘ஆண், பெண் இடையே ஏற்படும் ஈர்ப்பு, காதலாய் மலர்ந்து திருமணத்தில் முடியாவிடில் பிள்ளைகள் எப்படிப் பிறக்கும்’ என்பதைத் தெளிவாகக் காட்டிய தோடு முதல் அங்கத்தில் எளிய தமிழில் இடம்பெற்ற வசனங்கள் பாராட்டுக்குரியது.

இரு அங்கங்களாக இடம்பெற்ற நாடகம், ஆறு பாகங்களுடன் விரைந்து சொல்லப்பட்ட தொடர் கதைபோன்ற உணர்வைத் தந்தது. ஆறு பாகங்களில் ஒன்பது நடனங்கள். சில நடனங்கள் கதையின் போக்குக்கேற்ப உற்சாகம் சேர்த்து பார்வையாளர் களின் வரவேற்பைப் பெற்றன.

இரு காட்சிகளுக்கு இடையே மேடை அலங்காரம் மாற்றம் காணும்போது நீண்ட இடைவெளி இருந்தபோதும் பார்வையாளர் களின் கவனம் சிதறவில்லை.

ஆச்சாரமான குடும்பத்தைச் சேர்ந்தவராக வெங்கடேஷ் கதா பாத்திரத்தில் வித்தியாசமான பேச்சு நடையில் பேசி நிகழ்ச்சி முழுவதும் பார்வையாளர்களைச் சிரிக்க வைத்தார் சரவணன் சண்முகம், 23.

கருப் பொருளினின் தனித் தன்மையை எடுத்துக்காட்டும் வகை யில் இடம்பெற்ற இரண்டாம் அங்கத் தில் பல்கலைக்கழக மாணவர்களின் சிந்தனையாற்றல் புலப்பட்டது.

சிந்திக்க வைக்கும் ஆழமான கருத்துகளை அவர்கள் வெளிப்படுத் தினர். ஆனால் அவற்றை இன்னும் கொஞ்சம் எளிமைப்படுத்தி அனைத்து தரப்பினருக்கும் புரியும் விதத்தில் எடுத்துக் கூறியிருக்கலாம் என்பது பலரது கருத்தாக இருந்தது.

புத்தாக்கப் படைப்புகளுக்குப் பெயர்பெற்ற சங்கே முழங்கில் இடம் பெற்ற திருமணக் காட்சி அண்மையில் வெளிவந்த திரைப்படத்தில் இடம் பெற்ற காட்சியைப்போல அமைத்திருந் தது நெருடலாக இருந்தது. தனித் துவமான பாணியில் அமைந்திருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும்.

பலதுறைத் தொழிற் கல்லூரி, தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த பத்து மாணவர்களுக்கு மேடை நாடகம் ஒன்றை அரங்கேற்ற உதவி, அவர் களையும் நிகழ்ச்சியில் ஒருங் கிணைக்க முற்பட்டது இவ்வாண்டின் சங்கே முழங்கு.

நிகழ்ச்சி பதினைந்து நிமிடங்கள் தாமதமாகத் தொடங் கினாலும் இரவு பதினொரு மணிக்குள் நிறைவு பெற்றது.

“குழு உணர்வின் முக்கியத் துவத்தைக் கற்றுக்கொள்ள சங்கே முழங்கு நல்லதோர் வாய்ப்பை அளித்தது. 130 மாணவர்கள் கூடி ஒரு நிகழ்ச்சியைப் படைப்பது சாதாரண காரியமல்ல.

“ஒவ்வொருவருக்கும் வெவ் வேறு பணிகள் இருந்தாலும் நாம் அனைவரும் ஒரே குறிக்கோளை நோக்கி உழைக்கிறோம் என்ற மனப்பான்மையை வளர்த்துக் கொண்டதோடு, பல சவால்களைத் தாண்டி, புதுமையான கலை நிகழ்ச்சியைப் படைத்துள்ளோம்,” என்று கூறினார் ‘சங்கே முழங்கு’ நிகழ்ச்சியின் தயாரிப்பாளர் ஹெஷ்வின் மாதவா, 24.

> “ சங்கே முழங்கு நிகழ்ச்சியின் மூலம் பார்வையாளர்களை எங்களால் சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்க முடிந்திருக்கிறது. இதுவே எங்கள் உழைப்பிற்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றி.
>
> **‘சங்கே முழங்கு’ நிகழ்ச்சியின் துணை இயக்குநர் பாலசந்தர் நிவேதா**

எந்த ஒரு பெரிய அளவிலான நாடகத் தயாரிப்புக்கும் அதன் பின்னணியில் பலரது உழைப்பு இருக்கும் என்பதில் ஐயமில்லை.

அந்த வகையில், இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நடை பெற்ற சங்கே முழங்கு நிகழ்ச்சியில் ஓர் உறுப்பினராகக் கலந்து கொண்ட பாலசந்தர் நிவேதா, 22, அதன் பிரம்மாண்டத்தால் ஈர்க்கப் பட்டு இம்முறை தயாரிப்புக் குழுவில் இணைந்து, துணை இயக்குநர் பதவியை ஏற்றிருந்தார்.

“சங்கே முழங்கு நிகழ்ச்சித் தயாரிப்பின்போது எனக்கு பணிப் பயிற்சி இருந்ததால் நேரத்தை நிர்வகிப்பது மிகவும் சிரமமாக இருந்தது,” என்றார் நிவேதா. இருப்பினும், நிகழ்ச்சியின் மூலம் பார்வையாளர்களை எங்களால் சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்க முடிந்தது. அதுவே எங்கள் உழைப்பிற்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றி என்றார் அவர்.

சற்று புதுமையான ‘பால்ரூம்’ நடனத்தை நிகழ்ச்சியில் படைத்த பூஜா வேலுசாமி, 21, ‘சங்கே முழங்கு’ நிகழ்ச்சி மூலம் புதிய நட்புறவை வளர்த்துக்கொள்ள முடிந்ததாகவும் இதுபோன்ற அனுபவம் பல இடங்களில் கிடைக்காத காரணத்தால் இந்த வாய்ப்பை நழுவவிடவில்லை என்றும் கூறினார்.

கூடுதல் செய்தி: ரவீணா சிவகுருநாதன், மாதங்கி இளங்கோவன்

dtimothy@sph.com.sg



சங்கே முழங்கு நாடகக் காட்சி ஒன்றில், ரமேஷ்காந்தி வெங்கட், ஷர்மிலி செல்வராஜி.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.